**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | |
|---|---|
| CC.No. | : 142/2020 |
| Deposition of Witness for | : PW– 1 |
| Name and Age | : கிருஷ்ணன் (வயது 57) |
| Father / Husband Name | : பொன்னுசாமி |
| Occupation | : நடத்துநர் |
| Village | : கோட்டூர் |
| Taluk | : பாலக்கோடு |

**நாள்** – 05.03.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**A1 to A4 present.**

**PW– 1**

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 12–ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தை எனது அண்ணன் மகன் வஞ்சிகோவலன் எழுதினார். எங்கு வைத்து அ.சா.ஆ.1 எழுதப்பட்டது என்றால் எனது வீட்டில் வைத்து எழுதினோம். எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் 25.05.2020ம் தேதி எழுதப்பட்டது. என்ன நேரத்தில் எழுதப்பட்டது என்றால் மாலை 04.00மணிக்கு எழுதப்பட்டது. அ.சா.ஆ.1–ல் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வஞ்சிகோவலன் அ.சா.ஆ.1–ல் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். வஞ்சிகோவலன் எழுதிய புகார் வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்து காவல்நிலையத்தில் கொடுத்தேன். காவல்நிலையத்தில் எப்போது கொடுத்தேன் என்றால் 04.15மணியளவில் மாரண்டஹள்ளி காவல்நிலையத்தில் கொடுத்தேன். காவல்நிலையம் செல்லும்போது எனக்கு காயம் இருந்ததா என்றால் இருந்தது. காயத்தை போலிசார் பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். என்னை அரசு மருத்துவமனைக்கு செல்லும்மாறு அறிவுறுத்தினார்களா என்றால் இல்லை. கோட்டுருக்கும் சீரியம்பட்டிக்கும் எவ்வளவு தூரம் என்றால் 3 கி.மீ தூரம் இருக்கும். ஆஜர் எதிரிகளில் 1–ம் எதிரி கோட்டுரைச் சேர்ந்தவர் மற்ற எதிரிகள் சீரியம்பட்டியை சேர்ந்தவர்கள் ஆவர். தகராறு எங்கு நடைபெற்றது என்றால் கோட்டூரில் உள்ள எனது வீட்டின் முன்பு நடைபெற்றது. எனது வீட்டிற்கு அருகில் சாம்ராஜ் வீடு, சின்னசாமி வீடு, முனிராஜ், ரங்கன், தேவன், முத்து ஆகியோரின் வீடுகள் உள்ளது. எனது வீட்டிற்கும் மகேஸ்வரி வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 40 அடி தூரம் இருக்கும். வழக்கு சம்பவத்தின் போது மேற்படி எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் இருந்தார்களா என்றால்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.03.05 17:43:03 +0530

வாசவி இருந்தார். வேறு நபர்கள் இல்லை. தகராறு சமயத்தில் கொரோனா ஊரடங்கு கட்டுப்பாடு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். சம்பவத்தின் போது 2 முதல் 4 எதிரிகள் சம்பவம் நடந்து ஐந்து நிமிடம் கழித்து தான் வந்தார்கள் என்றால் சரிதான். மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேனா என்றால் தர்மபுரி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொள்ளாமல் தன்னிச்சையாக வெளியேறிவிட்டேன். எனக்கு முதுகில் வலி உள்ளதாக மருத்துவரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். அ.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள விபரம் தெரியுமா என்றால் நினைவில்லை. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1–ல் எனக்கு முதுகில் அடிப்பட்டதாகவோ வலி உள்ளதாகவோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதைப்போல் எதிரிகள் என்னை திட்டவோ அடிக்கவோ இல்லை என்றாலும், அதனால் தான் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.03.05 17:43:11 +0530

Judicial Magistrate,
Palacode.